20 ஜுலை 2022

## இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் அறிக்கை (NCCSL)

இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றமானது, (NCCSL) ஜனாதிபதி பதவிக் காலத்தை நிறைவு செய்யும் வண்ணமாக திரு. ரணில் விக்கிரமசிங்க அவர்கள் பாராளுமன்றத்தின் ஊடாக தெரிவு செய்யப்பட்டமையை ஏற்றுக்கொள்கிறது. நமது நாட்டின் இக்கட்டான அரசியல் மற்றும் பொருளாதார நிலைமையை கருத்தில் கொண்டு, மக்களின் குரலுக்கு செவிசாய்ப்பதில், திருச்சபைகளின் தலைவர்களாகிய நாம்,

- அரசியலமைப்பின் 17வது மற்றும் 19வது திருத்தங்களின் சிறந்த அம்சங்களை அறிமுகப்படுத்துவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக மேற்கொள்ளுமாறும், அதனூடாக பொது மக்களுக்கு கணக்கு ஒப்புவிக்குமாறும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்திற்கு அழைப்பு விடுக்கிறோம்.
- இனப்பிரச்சினை உட்பட நாடு எதிர்நோக்கும் சவால்களை கூட்டாக எதிர்கொள்வதற்கான இடைக்கால நடவடிக்கையாக, நாட்டின் நலன்களை முதன்மைப்படுத்தி, சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு உடனடியாக செயற்படுமாறு அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களை கேட்டுக்கொள்கின்றோம். அதனால் அனைவரும் சமத்துவத்துடனும், கண்ணியத்துடனும் உரிமையுடன் குடிமக்களாக வாழ முடியும்.
- 06-12 மாதங்களுக்குள் பொதுத் தேர்தலை நடாத்துவதன் மூலம் புதிய பாராளுமன்றத்தினூடாக மக்களது ஆணையை புதிய அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும் என வலியுறுத்துகிறோம்.

இறுதியாக, இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் (NCCSL) திருச்சபை தலைவர்களாகிய நாங்கள், நாட்டில் உருவாகியுள்ள மாற்றத்திற்கான இயக்கத்துடன் தொடர்ந்து நிற்போம்.

கையொப்பமிட்டோர்

**அங்கத்துவ திருச்சபைகள்**

- அருட்திரு. டபிள்யு.பி.எபனேசர் ஜோசப்- தலைவர்- இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் மற்றும் இலங்கை மெதடிஸ்த திருச்சபை
- பேராயர் அதி.வண.துஷாந்த றொட்ரிகோ, இலங்கைத் திருச்சபை, கொழும்பு மறைமாவட்டம்
- பேராயர் அதி.வண கீர்த்திசிறி பெர்னான்டோ, இலங்கைத் திருச்சபை, குருநாகலை மறை மாவட்டம்
- பேராயர் அதிவண. அறிவர். டேனியல்.எஸ்.தியாகராஜா- யாழ் மறைமாவட்ட பேராயர், தென்னிந்திய திருச்சபை
- அருட்திரு. ஹேஷான் டி சில்வா- தலைவர், இலங்கை பெப்டிஸ்ட் சங்கம்
- அருட்திரு.சமன் பெரேரா- தலைவர், இலங்கை பிரஸ்பட்டேரியன் திருச்சபை
- அருட்திரு. சர்லி பேபர்- தலைவர், கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபை
- ஆணையாளர் நிஹால் ஹெட்டியாராச்சி - பிராந்திய தளபதி, இரட்சண்ய சேனை
- அருள் அறிவர். கிறிஸ்சோ ஹெண்டி- தலைவர், இலங்கை மக்கள் தேவ சபை
- அருட்திரு. ஹரிம் பீரீஸ்- உப தலைவர் - நாற்சதுர சுவிசேஷ திருச்சபை
- அருட்திரு.மெக்ஸ்வெல் டொஸ் - பொதுச் செயலாளர், இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்

**அங்கத்துவ ஒருமைப்பாட்டு அமைப்புக்கள்:**

- இளம் ஆடவர் கிறிஸ்தவ அமைப்பு (YMCA)
- இளம் பெண்கள் கிறிஸ்தவ அமைப்பு (YWCA)
- கிறிஸ்தவ மாணவர் ஒன்றியம் (SCM)
- இலங்கை வேதாகம சங்கம்
- கிறிஸ்தவ இலக்கிய சங்கம்
- இலங்கை இறையியல் கல்லூரி
- சத்திய வசனம்